# இறைச்சி

இஃது உள்ளுறை ஊமத்தை போலவே அகப்பொருள் பாட்டுகளில் தெய்வம் ஒழிந்த ஏனைய கருப்பொருட்கள் மூலம் பிறக்கும்.

உள்ளுறையில் உவமானம் மட்டும் கூறப்பட்டிருக்கும். அதிலிருந்து குறிப்பாக உவமேயப் பொருளை எடுத்துக் கொள்ளுவர். உள்ளுறை இதோடு முடிந்துவிடும். இதோடு நின்று விடாது இதற்கு அப்பாலும் அதனோடு தொடர்புடைய ஒரு பொருள் தங்கி இருக்கும். அப்பொருளை குறிப்பில் உணர்கின்ற வல்லார் காண்பர். இதற்கு இறைச்சி என்று பெயர்.

**இறு** என்னும் பகுதியின் அடியாக பிறந்தது இறைச்சி என்னும் சொல், தங்குதல் என்னும் பொருள் உடையது. உள்ளுறைக்கும் அப்பால் தங்கி இருக்கின்ற ஒரு பொருள் என்பதாகும்.

**இறைச்சியில் பிறக்கும் பொருளுமா ருளுவே**

**திறத்தியல் மருங்கின் தெரியு மோர்கே.**
**– (தொல்பொருள் 36)**

**இறுத்தல்** என்றால் **தங்குதல்** என பொருளாகும். உரிப்பொருளோடு நேரடி தொடர்பில்லாத குறிப்புப் பொருளே இறைச்சியாகும். இது வடமொழியில் காணப்படும் தொணிக்கு இணையானது. இறைச்சி அகப்பாடலில் மட்டும் வரும் தொணி அகம் புறம் இரண்டிலும் வரும்.

**எடுத்துக்காட்டு ; 1**

நசை பெரிது உடையர் நல்களும் நல்குவர்

பிடிப்பசி கலைய பெருங்கை வேழம்

மென்சினை யாஅம் பொளிக்கும்

அன்பின தோழி அவர் சென்ற ஆறே. – **(குறுந்தொகை 37)**

**பொருள்**

தலைவன் செல்லும் வழியில் யானைத் தன் பெண் யானையின் பசியை போக்குவதற்காக யா மரத்தின் பட்டையை உரித்து அதில் உள்ள ஈரசுவையை பருக செய்யும்.

**இறைச்சி**

தலைவன் இந்த அன்பு காட்சியை பார்த்து உடனே திரும்பி வந்து தலைவியின் துன்பத்தை தீர்ப்பான் என்பது இதில் மறைந்துள்ள குறிப்பு ஆகும்.

**எடுத்துக்காட்டு; 2**

நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று

அன்னை கூறினல் புன்னை அது சிறப்பே

அம்ம நாணுதும் நும்மோடு நகையே. – **(நற்றிணை 172)**

நீ விளையாடி மகிழும் இடத்தில் உள்ள இப்புன்னை மரம் உன்னை விட சிறந்தது என்றும், உனக்கு தங்கை ஆவால் என்றும், நற்றாய் என்னிடம் கூறினாள். இம்மரத்தடியில் உன்னுடன் விளையாட நாணுகிறேன். ஏனெனில் தங்கை அருகிருக்க தலைவனுடன் பழகுவது முறையா ? என்று தலைவி தலைவினிடம் கூறினாள்.

**இறைச்சி**

நாம் வேறு இடத்தில் சந்திக்கலாம் என்ற குறிப்பு பொருளும் தலைவியை, தலைவன் விரைவில் மணந்து கொள்ள வேண்டும் என்ற குறிப்பு பொருளும் அடங்கியுள்ளன.

**எடுத்துக்காட்டு : 3**

பல் கோட் பலவின் சாரல் அவர் நாட்டு

நின்கிளை மருங்கிற் சேறி யாயின்

அம்மலைக் கிழவோர்க்கு உரைமதி இம்மலைக்

கானக் குறவர் மடமகள்

ஏனல் காவல் ஆயினள் எனவே. – **(நற்றிணை 102)**

குறிஞ்சி நிலத்து தலைவி ஒருத்தி குறிஞ்சி நிலத்து தலைவன் ஒருவனை காதலிக்கின்றாள். அவனும் பகற்குறி, இரவுகுறி ஆகிய இரண்டு குறிகளிலும் தலைவியை சந்தித்து விட்டு செல்லுகின்றான். திடீரென்று சந்திப்பதை நிறுத்தி விடுகின்றான். தன்னை திருமணம் செய்து கொள்வான் என எதிர்பார்த்து இருந்த


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

தலைவி கவலை கொள்கின்றார். கிளியை தூது அனுப்புகின்றாள்.

கிளியே! பலவாயக் காய்களை காய்கின்ற பலா மரங்கள் நிறைந்த சாரலையுடைய அவர் நாட்டின் கண் உள்ள நின் சுற்றத்தினிடம் செல்வாயின், அம்மலைக்கு உரியவரிடம் இம்மலை குறவருடைய இளமகள் தினைக் கொல்லைக் காவலுக்கு அமைந்து ஆண்டிருக்கின்றாள் என்பதை கூறுவாயாக. என சொல்லி அனுப்புகின்றாள்.

தலைவனுடைய நாட்டுப் பலாமரங்கள் காய்களைக் காய்க்க தொடங்குவது போல், தலைவியின் வாழ்க்கையிலும் புதிய வாழ்க்கை தொடங்கப் போகின்றது என்பதாம். இது உள்ளுறை ஆகும்.

இதோடு நின்று விடாமல் இதற்கு அப்பாலும் வேறு ஒரு பொருள் தங்கி இருக்கின்றது.

தலைவியை கைவிட்ட கொடுமையை உடையவருடைய சாரலாயிருந்தும் அச்சாரலின் கண் உள்ள பலாமரங்கள் பிறருக்கு பயன்படுமாறு காய்கின்றனவே இது என்ன வியப்பு ? என்பதாம்.

இஃது இறைச்சியாம். இங்கனம் உள்ளுறைக்கும் அப்பால் ஒரு பொருள் தங்கி இருக்கின்றது. பலா மரங்கள் காய்ப்பதைக் கொண்டு அவன் அன்புடையவன்; அவளை விரைவில் திருமணம் செய்து கொள்வான் என்னும் கருத்து பெறப்படுகின்றது.

**எடுத்துக்காட்டு : 4**

கருங்கண் தாக்கலை பெரும்பிறிது உற்றெனக்

கைம்மை உய்யாக் காமர் மந்தி

கல்லா வன்பறழ் கிளைமுதல் சேர்த்தி

ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்

சாரல் நாட ! நடு நாள்

வாரல் வாழியோ வருந்தும் யாமே. – **(குறுந்தொகை 69)**

குறிஞ்சி நிலத்து தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் காதலிக்கின்றனர். தலைவன் நெடுந்துாரத்தில் இருக்கின்றான் நடு இரவு என்று கூட பார்க்காமல் தலைவியை சந்தித்து விட்டு செல்கின்றான். நாள்தோறும் இப்படித்தான் செய்கின்றான். தோழியினால் இக்களவொழுக்கத்தை பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

தோழி தலைவனை பார்த்து,

மலைச்சாரல் நாட்டிற்கு தலைவனே! உன்னுடைய நாட்டில் கரிய கண்களையும் தாவும் இயல்பை உடைய ஆண் குரங்கு ஒன்று இறந்துவிட்டது. கைம்மை துன்பத்தை தாங்க முடியாத பெண் குரங்கு தன்னிடம் இருந்த குட்டியை தன் உறவினிடம் ஒப்படைத்துவிட்டு மழை உச்சிக்கு சென்று அங்கிருந்து பாய்ந்து உயிரை போக்கிக் கொண்டது. அத்தகைய மழைநாட்டை உடையவனே நடு இரவில் தலைவியை தேடி வருவதை தவிர்க்கவும். நீ இரவில் வருவதால் உனக்கு தீங்கு வருமா என்று யாம் அஞ்சுகின்றோம்! தீங்கு வராமல் வாழ்வாயாக எனக் கூறுகின்றாள். இது செய்தி.

இச்செய்தியில் உள்ளுறையும், இறைச்சியும் அமைந்துள்ளன. ஆண் குரங்கு இறந்து விட கைம் மையுடன் வாழ விரும்பாத பெண் குரங்கு உயிரைப் போக்கிக் கொண்டதைப் போன்று, தலைவன் நீ இரவில் வருகையில் புலி, யானை, பாம்பு ஆகிய கொடுமையானவற்றால் நீ இறக்க நேர்ந்தால் தலைவியும் கைம்மையுடன் வாழ விரும்பாது இறந்து விடுவாள். இது உள்ளுறை. இதோடு நின்று விடாமல் இதற்கு அப்பாலும் வேறு ஒரு பொருள் தங்கி இருக்கின்றது. தலைவா! உன் நாட்டு அஃறிணை பொருளாகிய பெண் குரங்கு கூட கணவன் இறக்க தான் உயிர் வாழாது இறக்கும் எனின் எம் தலைவி மட்டும் எப்படி உயிர் வாழ்வார் ? அவருடைய உணர்ச்சியை உன்னால் புரிந்து கொள்ள முடியாதா ?



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

இது இறைச்சி. இங்கனம் உள்ளுறைக்கும் அப்பால் ஒரு பொருள் தங்கி இருக்கின்றது அதுதான் இறைச்சி.

அஞ்சி, அஞ்சி ஏன் இரவில் வந்து துன்பப்பட வேண்டும்? களவொழுக்கத்தை கைவிட்டு தலைவியை திருமணம் செய்து கொண்டு அவளோடு இல்லறம் நடத்த வேண்டும் என்னும் கருத்து பெறப்படுகின்றது.

**எடுத்துக்காட்டு 5**

இலங்கும் அறிவித்து இலங்கும் அறிவித்தே

வானின் இலங்கும் அறிவித்தே – தான் உற்ற

சூள்பேனாண் பொய்த்தான் மலை. – (கலித்தொகை 41)

சொன்னபடி நடக்காதவனின் நாட்டில் உள்ள மலையில் மழை பொழிந்து அருவி கொட்டுகின்றது. இது செய்தி. இச்செய்தியில் உள்ளுறையும் உள்ளது, இறைச்சியும் உள்ளது.

மலையில் மழை பொழிந்து அருவி கொட்டுகின்றதைப் போன்று தலைவனைப் பிரிந்து தனிமையில் வாடும் தலைவியின் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாக கொட்டுகின்றது இது உள்ளுறை.

அஞ்சாதே! உன்னை திருமணம் செய்து கொள்வேன், குறிப்பிட்ட நாளில் திரும்பி விடுவேன் என்றெல்லாம் சூளுரை செய்து அங்கனம் நடந்து கொள்ளாது, பொய் பேசியவனின் மலையிலே மலை கூட பெய்கின்றது. அருவியிலே தண்ணீர் கொட்டுகின்றதே! இது வியப்பாக இருக்கின்றது இது இறைச்சி.

இங்ஙனம் உள்ளுறையோடு இறைச்சி பொருந்தி வரும்.

**உள்ளுறை உவமத்திற்கும், இறைச்சிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்**

| ஒற்றுமைகள் | |
|---|---|
| **உள்ளுறை** | **இறைச்சி** |
| அக பாடல்களிலேயே வரும். | அக பாடல்களிலேயே வரும். |
| கருப்பொருட்களிலேயே பிறக்கும். | கருப்பொருட்களிலேயே பிறக்கும். |
| குறிப்பாக பொருளை உணர்த்தும். | குறிப்பாக பொருளை உணர்த்தும் |

| வேற்றுமைகள் | |
|---|---|
| **உள்ளுறை** | **இறைச்சி** |
| உவமை அமைந்திருக்கும். உவமேயத்தின் மூலமாக கருத்து பெறப்படும். | உவமை, உவமேயத்திற்கும் அப்பால் குறிப்பினால் கருத்து பெறப்படும். |
| உவமேயப் பொருளுக்கு ஏற்ற உவமானம் குறைவின்றி முழுமையாக அமைந்திருக்கும். | அப்படி அமைந்திருக்காது. |
| உவமானத்திற்கு ஏற்ற உவமேயப் பொருளையே புலப்படுத்தும். | உவமை கருப்பொருள் மூலமாக வேறு ஒரு பொருள் தோன்றும். |
| தலைவனின் கொடுமை பற்றி கூறும் இடத்திலும், அன்பை எடுத்துரைக்கும் இடத்திலும் உணர்த்தும். | குறிப்பினால் மற்றொரு பொருளை உணர்த்தும். பெரும்பான்மை தலைவனின் கொடுமை கூறும் இடத்திலும் சிறுபான்மை அன்பு உரைக்கும் இடத்திலும் வரும். |
| பலர் கூறும் மொழியாக அமையும். | தலைவி, தோழி ஆகியோர் கூறும் மொழியாக அமையும். |
| மேற்போக்காக நோக்கினால் வேறு பொருள் தோன்றும். | உணர்வினில் வல்லோர் ஆழ்ந்து நோக்கினால்தான் வேறு பொருள் தங்கி இருப்பது தெரியும். |



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in